III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.34/2014

Deposition of witness for the Defendant/DW4
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 25-07-2022

| | | | |
|---|---|---|---|
| Name | :Saraswathi | Caste | : |
| Father's/Husband's Name | :Suresh | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் மூன்றாம் பிரதிவாதி. நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 15 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, பி.த.சா.48 முதல் 62 வரை ஆகும். நான் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். (பி.தா.சா.61 மற்றும் 62 ஆகியவை செராக்ஸ் நகல்கள் என்பதாகையால் அதை மேற்கோள் காட்டி பிரதிவாதிகள் 4 முதல் 6 ன் கற்றறிந்த வழக்கறிஞர் எழுப்பும் ஆட்சேபனை பதிவு செய்யப்படுகிறது)

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது பிறந்த தேதி 09/07/1971. நான் எம்.சி.ஏ படித்துள்ளேன். நான் சென்னையில் ஸ்டேண்டர்சார்டர் வங்கியில் Vice President ஆக பணி புரிகிறேன். என்னை படிக்க வைத்தது எனது தாத்தா சுப்பையா. என்னை திருமணம் செய்து கொடுத்த போது சுப்பையா இறந்துவிட்டார். குடும்ப வருமானத்தை வைத்து எனது திருமண செலவுகள் செய்யப்பட்டது. இந்த வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள். டி அட்டவணை சொத்துக்களில் ஐடம் 6 எனது பெயர் மற்றும் எனது அக்கா ராஜலட்சுமி பெயரிலும் உள்ளது. அது கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது. வா.த.சா.44 பாகப்பிரிவினை பத்திரத்தில் அனைவரும் கையொப்பமிட்டுள்ளோம். அதன் தேதி 07/09/2009. சுப்பையாவின்

வாரிசுகள் அனைவரும் அந்த பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளார்கள். எப் அட்டவணையில் கண்டுள்ள செனாய் நகரில் அமைந்துள்ள சொத்தின் வாடகையை தற்போது நானும் எனது அக்கா ராஜலட்சுமியும் பெற்று வருகிறோம். வா.த.சா44 ன் படி அந்த சொத்து எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்டது. எனது தாயாரின் இறப்பிற்கு பின்னர் அதன் வாடகையை நானும் ராஜலட்சிமியும் பெற்று வருகிறோம். எனது சித்தப்பா தாமோதரன் இறக்கும் போது முதல் வாதி சுலோச்சனாவிற்கு வயது சுமார் 22 அல்லது 23 இருக்கும். அப்போது இரண்டாவது வாதி கோபாலுக்கு வயது சுமார் 2 அல்லது 3 இருக்கும். வேலப்பன்சாவடியில் உள்ள இ அட்டவணை சொத்தை எனது சித்தப்பா கோவிந்தசாமி வாங்கினார். கோவிந்த சாமி வாங்குவதற்கு நாங்கள் அவருக்கு அதிகார பத்திரம் எழுதி கொடுத்திருந்தோம். வருமான வரி கணக்கையும் கோவிந்தசாமி தான் எல்லோருக்கும் தாக்கல் செய்து வந்தார். சி அட்டவணை சொத்தான கோலடியில் உள்ள சொத்து காலியாக இருந்தது. பி அட்டவணை சொத்தான செங்கரையில் உள்ள சொத்தில் மாந்தோப்பு இருந்தது. தற்போது மாந்தோப்பு இருக்கிறதா என்றால் சரியாக நினைவில்லை. அதை கோவிந்தசாமியின் மகன்கள் தான் விவசாயம் செய்து வருகிறார்கள். வேலப்பன்சாவடியிலுள்ள இ அட்டவணை சொத்தின் வாடகையை முதலாவது வாதி சுலோச்சனாவும் நான்காவது வாதி சாந்தியும் பிரித்து கொள்ள செ ால்லி நாங்கள் அவர்களுக்கு தடையின்மை கடிதம் கொடுத்தோம். அந்த கடிதத்தில் நாங்கள் 12 பேரும் கையெழுத்து போட்டு கொடுத்தோம். வாதிகள் இருவருக்கும் தாவா சொத்துகளில் 1/5 பங்கு கொடுக்க ஆட்சேபனை இல்லை. தாவா சொத்துகளில் சில எனது தாத்தா சுப்பையாவின் பேரிலும் மற்ற சொத்துகள் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களின் பேரில் உள்ளது. கோவிந்த சாமியின் பேரில் கொடுத்த அதிகார பத்திரத்தை நாங்ள் ரத்து செய்ததற்கான காரணம் அவர் மீதான நம்பிக்கையை நாங்கள் இழந்தது தான்.

(4 முதல் 6 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)